செய்தி மாலை

தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனம்

மடல்-56 ஆகஸ்டு, 2025

வங்கிகள் தேசியமயத்தினை எந்நாளும் காத்திடுவோம்
தனியார்மய நடவடிக்கைகளை தடுத்திடுவோம்
அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் தேசியமய தின அறைகூவல்

இந்தியா முழுவதும் உள்ள வங்கி ஊழியர்கள், கடந்த ஜூலை 19, 2025ம் நாளன்று வங்கிகள் தேசியமயமாக்கலின் 56வது ஆண்டு நிறைவினை உணர்வுபூர்வமாக அனுசரித்தனர்.

அகில இந்திய வங்கி ஊழியர் சங்கம் 20-04-1946 அன்று துவங்கப்பட்ட நாள் முதற்கொண்டே அனைத்து தனியார் வங்கிகளையும் அரசுடைமை ஆக்கிட வேண்டும் என்பதை முக்கிய கோரிக்கையாக பிரகடனப் படுத்தி பல்வேறு போராட்ட திட்டங்களை மேற்கொண்டது.



அன்றைய காலகட்டத்தில், தனிநபர்கள் கட்டுப்பாட்டிலிருந்த நூற்றுக்கணக்கான தனியார் வங்கிகள் நிர்வாக முறைகேடுகளால் நலிவுற்று, அதன் விளைவாக நஷ்டம் ஏற்பட்டது என்ற காரணம் கூறப்பட்டு மூடப்பட்டன. அத்தகைய வங்கிகளில் வாடிக்கையாளர்கள் வைத்திருந்த சேமிப்பு தனியார் வங்கி முதலாளிகளால் கையாடல் செய்யப்பட்டு, வாடிக்கையாளர்கள் மட்டுமின்றி அத்தகைய வங்கிகளில் பணியாற்றிய ஊழியர்களும் தங்களுடைய வேலையை இழந்து வீதியில் விடப்பட்டனர்.

அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் இடைவிடாத போராட்டங்கள் மற்றும் அரசியல் ரீதியான முயற்சிகளால், 1969 ஆம் ஆண்டு ஜூலை 19ஆம் தேதி தனியார் வசமிருந்த 14 பெரிய வங்கிகளை அப்போதைய ஒன்றிய காங்கிரஸ் அரசாங்கம் தேசியமயமாக்கியது.

வங்கிகள் தேசியமயம்- அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் வரலாற்றுச் சாதனை

இந்திய நாட்டின் அனைத்து தரப்பு மக்கள், கிராமம் மற்றும் நகரங்களில் இருந்த விவசாயிகள் மற்றும் சிறு வியாபாரிகள் போன்றோர் வங்கிகள் தேசியமய நடவடிக்கையினை பெரிதும் வரவேற்று மகிழ்ச்சி அடைந்தனர். வேளாண் தொழில் நிமித்தம் தனிநபர்களிடமிருந்து தாங்கொணா வட்டி விகிதத்தில் கடன் வாங்கி, அதன் காரணமாக நித்தமும் மூச்சுத் திணறிக் கொண்டிருந்த இலட்சக்கணக்கான சிறு, குறு விவசாயிகள், வங்கிகள் தேசியமயம் ஆனபின்பு, தாங்கள் விடுதலை பெற்றதுபோல் உணர்ந்தனர். வங்கிகள் தேசியமயமாக்கல், 'இரண்டாம் சுதந்திரம்' என்று அனைவராலும் போற்றப்பட்டது.

ஆகஸ்ட் 15, 1947 அன்று, இந்தியா, ஆங்கிலேயர் ஆட்சியில் இருந்து அரசியல் சுதந்திரத்தைப் அடைந்ததற்கு இணையாக 1969 ஆம் ஆண்டு ஜூலை 19 ஆம் தேதி, இந்திய நாடு 'பொருளாதார சுதந்திரத்தைப்' பெற்றதாகவும், அதன் காரணமாக அனைத்து உற்பத்தி சாதனங்களுக்கும் சொந்தம் கொண்டாடிவந்த ஏகபோக மூலதனத்திலிருந்து இந்தியா தன்னை விடுவித்துக் கொண்டதாகவும் மக்கள் உணர்ந்தனர்.



பொருளாதார சமநிலை இன்றி பணக்காரர்களுக்கும் ஏழைகளுக்கும் இடையிலான இடைவெளி அதிகரித்துக் கொண்டே வந்த சூழலில், 1980ம் ஆண்டு மேலும் ஆறு தனியார் துறை வங்கிகள் தேசியமயமாக்கப்பட்டன.

பொதுமக்கள் சேமிப்பினையும் - ஊழியர்கள் பணிப் பாதுகாப்பினையும் உறுதி செய்த AIBEA

தனியார் துறையில் செயல்பட்டுவந்த பலவீனமான வங்கிகள் ஒன்றன் பின் ஒன்றாக பொதுத்துறை வங்கிகளுடன் இணைக்கப்பட்டு, அந்த வங்கிகளில் சேமித்து வைத்துள்ள பொதுமக்கள் சேமிப்பு பாதுகாக்கப்பட்டதுடன், வங்கிகளில் பணிபுரியும் ஊழியர்களுக்கு வேலையின் முழுப் பாதுகாப்பும் வங்கி தேசியமயம் மூலமாக உறுதி செய்யப்பட்டது.

தேசியமய நடவடிக்கையின் விளைவாக 1969 முதல், பொதுத்துறை வங்கிகளின் மீதான மக்களின் நம்பிக்கை அதிகரித்தது. சாதாரண மக்களின் சேமிப்புகள் பெருகியதன் காரணமாக இன்று வங்கிகளின் வைப்புத் தொகை சுமார் 140 இலட்சம் கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது.

வங்கிகள் நாட்டுடைமை ஆனதைத் தொடர்ந்து, எண்ணற்ற வங்கிக் கிளைகள் இந்தியா முழுவதும் துவங்கப் பெற்று வாடிக்கையாளர் எண்ணிக்கை பல்கிப் பெருகியது. 1969ல் 8,200 வங்கிக் கிளைகள் இருந்த நிலையில், தற்போது அனைத்து வகையான 90,000 வங்கிக் கிளைகள் இந்திய நாடெங்கும் இயங்கி வருகின்றன.

அவற்றுள் 35,000 வங்கிக் கிளைகள் கிராமப்பகுதிகளில் இயங்குவதால், விவசாயத் துறை, சிறு மற்றும் குறு தொழில்களுக்கு கடனுதவி அளிப்பதோடு, கல்விக் கடன், பெண்களுக்கான சுயதொழில் கடனுதவி, தொடக்க நிலை நிறுவனங்கள் மற்றும் நடுத்தர முதல் பெரிய அளவிலான தொழில்களுக்கான நிதியுதவி உள்ளிட்ட சுமார் 110 லட்சம் கோடி ரூபாய் அளவிலான கடன் தொகை வங்கிகள் மூலம் வழங்கப்பட்டுள்ளது.

அரசுத் துறை வங்கிகளை சீரழிக்கும் ஒன்றிய ஆட்சியாளர்களின் போக்கு

தேசியமய நடவடிக்கைக்குப் பின்னால், இருவேறு மோசமான போக்குகள் அதிவேகமாக வங்கித்துறையினை சீரழிக்கத் துவங்கின. அவை அரசியல் மற்றும் நேர்மையற்ற கலாச்சாரம். ஒன்றிய ஆட்சியிலிருந்த பா.ஜ.க துவக்கத்திலிருந்தே, தங்களுடைய கட்சி பொதுத்துறைக்கு எதிரானது என்று அறிவித்ததுடன், பொதுத்துறை வங்கிகளை பலவீனப்படுத்தும் கொள்கைகளை அமல்படுத்தத் துவங்கியது.



அதேபோல் முந்தய காலகட்டத்தில் தேசியமயமாக்கலுக்கு துணைநின்ற காங்கிரஸ் கட்சி, தங்கள் நிலையிலிருந்து மாறுபட்டு, அவர்கள் ஆட்சிப் பொறுப்பில் இருந்த காலகட்டத்தில் பொதுத்துறை வங்கிகளில் அரசின் பங்கினை, 100% லிருந்து 55% மேல் குறைக்கத் தொடங்கினர்,

தனியார்துறையில் இருந்த வங்கிகளையும் தேசியமயமாக்கிட வேண்டும் என்ற கோரிக்கையினை நிறைவேற்றாத ஒன்றிய ஆட்சியாளர்கள், வங்கிகளில் கார்பொரேட் பெரு முதலாளிகள் தாங்கள் வாங்கிய பெரும் வங்கிக் கடன்களை வேண்டுமென்றே திருப்பிச் செலுத்தாத போக்கினை ஊக்குவிக்கும் விதமாக பல்வேறு சலுகைகளை வழங்கினர்.

பொதுத்துறை வங்கிகளை சீரமைக்கின்றோம் என்ற பெயரில் பல குழுக்களை அமைத்து அவை மூலம் தனியார்மய திட்டங்களை பரிந்துரைத்தனர். அதன் விளைவாக, வங்கிகளில் கடன் வாங்கிய பெரு முதலாளிகள் தாங்கள் வாங்கிய கடன் தொகைகளை வேண்டுமென்றே திருப்பிச் செலுத்தாது வங்கிகளை ஏமாற்றும் போக்கு அதிகரிக்கத் துவங்கியது.

இத்தகைய மோசடியான போக்கினால், வங்கிகளில் வாராக்கடன்கள் பல்கிப் பெருகி பல ஆயிரம் கோடி ரூபாய் கடன் நிலுவையாக ஒவ்வொரு வங்கியிலும் அதிகரித்தது. இந்த மோசடிகளுக்கு **NPA (NON-PERFORMING ASSETS)** என்று பெயர் சூட்டப்பட்டது. ஒன்றிய அரசின் தவறான மற்றும் இத்தகைய மோசடிப் பேர்வழிகளுக்கு ஆதரவான செயல்களாலும் சட்டங்களாலும், ஊழியர்களின் உழைப்பின் மூலம் கிடைக்கும் இலாபம் இத்தகைய மோசடியாளர்களின் வாராக் கடன்களுக்கு வரவு வைக்கப்படும் புதிய கலாச்சாரம் வங்கித்துறையில் பரவியது.

வங்கிகளின் வாராக் கடன் பிரச்சினையினை மூடி மறைக்க, ஏற்கத்தகாத முறைகேடான வழிவகைகள் வங்கியாளர்களால் பயன்படுத்தப்பட்டன. இத்தகைய நடவடிக்கைகளில் அரசு, வங்கி நிர்வாகிகள் மற்றும் கார்பொரேட் முதலாளிகளின் மோசடியான கூட்டு ஆகியவையும் அரசியல் மற்றும் நிர்வாக மெத்தனப் போக்கும் வெளிப்படையாக தெரியத் துவங்கின.

வங்கிக் கடன் மோசடியாளர்களுக்கு சாதகமான ஒன்றிய அரசின் கொள்கைகள்

இத்தகைய போக்கின் விளைவாக, வங்கிகளில் தங்கள் சேமிப்பை பாதுகாப்பிற்காகவும், வட்டி வருமானத்திற்காகவும் வைத்துள்ள சாதாரண மக்களின் பணத்தை இத்தகைய பெருமுதலாளிகள், கடனாகப் பெற்று அதை வேண்டுமென்றே திருப்பிச் செலுத்தாத மோசமான கலாச்சாரம் வழக்கமான அம்சமாக மாறியது. வங்கிகள் அரசுக்குச் சொந்தமானதாக இருந்ததால், மக்களின் நம்பிக்கை அதிகரித்தது. அதேசமயம் வங்கிக் கடனை செலுத்தாதவர்களும் அதிக எண்ணிக்கையில் அதிகரித்துள்ளனர்.



பெரும் கடனை செலுத்தாதவர்கள், ஒன்றிய அரசாங்கத்தின் சட்டங்களின் துணையுடனும், ஆளும் வர்க்கத்தின் ஆதரவுடனும் நாட்டை விட்டே வெளியேறி தப்பித்து, அயல் நாடுகளில் குடியேறி ஆடம்பர வாழ்க்கையை வாழத் தொடங்கினர். மார்ச் 31, 2025 நிலவரப்படி, வேண்டுமென்றே கடனைத் திருப்பிச் செலுத்தாத 1,629 நபர்களின் மொத்தக் கடன் நிலுவை ரூபாய் 1.62 லட்சம் கோடிக்கும் அதிகமாக உள்ளதாகவும், பொதுத்துறை வங்கிகள் கடந்த 9 ஆண்டுகளில் ரூபாய் 12 லட்சம் கோடிக்கு மேல் கடன் தள்ளுபடி செய்துள்ளதாகவும் ஒன்றிய அரசு தெரிவித்துள்ளது.

வங்கிகளில் வாங்கிய பெரும் கடன்தொகையினை வேண்டுமென்றே திருப்பிச் செலுத்தாதவர்கள் மீது நடவடிக்கை எடுக்கக் கோரியும், மற்றும் பொதுத்துறை வங்கிகளை தனியார்மயமாக்குவதற்கு எதிர்ப்பு தெரிவித்தும், தொழிற்சங்க ரீதியான மாபெரும் பிரச்சாரத்தை அகில இந்திய வங்கி ஊழியர் சங்கம் தொடர்ந்து மேற்கொண்டது.

தனியார்மய நடவடிக்கைகள் நாட்டு நலனுக்கு எதிரானவை
வங்கிக் கிளைகளில் போதுமான ஊழியர் நியமனம் உடனடித் தேவை

இன்று பொதுத்துறை வங்கிகளை பலவீனப்படுத்தவும், பொதுத்துறை வங்கிகள் மீது வாடிக்கையாளர் அதிருப்தியை உருவாக்கவும், போதுமான பணியாளர்களை நியமிக்காமல் ஊழியர்களின் எண்ணிக்கை குறைக்கப்படுவதைக் காண்கிறோம். பொதுத்துறை வங்கி செழிக்க வேண்டுமானால், வங்கிக் கிளைகளில் பொதுமக்களுக்கு வாடிக்கையாளர் சேவை முக்கியம்.



எனவே, பொதுத்துறை வங்கிகளில் தேவைப்படும் ஊழியர்களை உடனடியாக நியமனம் செய்திட வேண்டும் என்ற கோரிக்கை முதன்மையானது ஆகும். தேவையான நிரந்தர ஊழியர் நியமனம் செய்வது கிளைகளில் பணியாற்றும் ஊழியர்களின் மன அழுத்தத்தைக் குறைப்பது மட்டுமல்லாமல், வாடிக்கையாளர் சேவை மேம்பாட்டினை உறுதி செய்வதற்கும் உதவிடும்.

அதேபோன்று, வங்கிகள் தனியார்மயமாக்கப்பட்டால், அதன் காரணமாக ஊழியர்களுக்கும், வாடிக்கையாளருக்கும் பொது மக்களுக்கும் தீங்கு பயக்கும் விளைவுகள் பன்மடங்கு இருக்கும்.

- பொது மக்களின் பலகோடி அளவிலான சேமிப்பு தனியார் நிறுவனங்களின் கைகளுக்குச் செல்லும். இந்த விலைமதிப்பற்ற சேமிப்பு தனியார் பெரு முதலாளிகளின் சொந்த லாபத்திற்காக மட்டுமே பயன்படுத்தப்படும்.

- முன்னுரிமைத் துறைகளுக்கு தேவைப்படும் நிதியுதவிகள் முற்றிலுமாக நிறுத்தப்பட்டு அவற்றின் வளர்ச்சி புறக்கணிக்கப்படும்.

- கிராமப்புறங்களில் செயல்படும் வங்கிக் கிளைகள் தனியார் நிர்வாகங்களினால் மூடப்பட்டு கிராமப்புற பொருளாதார வளர்ச்சி பாதிப்பிற்கு உள்ளாகும்.

- லாபத்தை அதிகப்படுத்துதல் என்ற பெயரில், நிரந்தர வேலைகள் குறைந்த ஊதியத்துடன் ஒப்பந்த முறையில் மாற்றப்படும். இது இளைஞர்களின் வேலை வாய்ப்பினை தடுத்து சமுதாய வளர்ச்சிக்கு எதிரானதாக இருக்கும்.

- தனியார்மய நடவடிக்கை காரணமாக வங்கிப்பணி நியமனங்களில் இடஒதுக்கீடு முறை முற்றிலுமாக கைவிடப்படும்.

எனவே, வங்கிகளை தனியார்மயமாக்குவதை தீவிரமாக எதிர்த்து, பொதுத்துறை வங்கிகளைப் பாதுகாத்து அவற்றை மேம்படுத்த அனைத்துப் போராட்டங்களையும் அகில இந்திய வங்கி ஊழியர் சங்கம் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றது.

தேசியமயம் காத்திட அகில இந்திய வங்கி ஊழியர் சங்கம் தொடர்ந்து போராடும்

பொதுத்துறை வங்கிகள் திறமையற்றவை என்ற பிரச்சாரத்தை முறியடிக்கவும் வங்கிகளை தனியார்மயமாக்கும் நடவடிக்கைகளை தடுத்திடவும் நாட்டு மக்களிடையே தொடர்ந்து இயக்கங்களை நடத்திட அகில இந்திய வங்கி ஊழியர் சங்கம் உறுப்பினர்களை தேசியமய தினத்தில் வலியுறுத்துகின்றது.



கடந்த முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக, நாடெங்கிலும் ஏராளமான கருத்தரங்குகள், பாராளுமன்றம் முன்பு பேரணிகள், வெகுஜன கையெழுத்துப் பிரச்சாரங்கள், ஒன்றிணைந்த போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள் மற்றும் பல வெற்றிகரமான வேலை நிறுத்தங்கள் போன்ற தீவிரமான பிரச்சாரங்கள் அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தினால் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டன. அகில இந்திய வங்கி ஊழியர் சங்க உறுப்பினர்களால் தேசபக்தி உணர்வுடன் கூடிய எழுச்சியுடன், வங்கிகள் தேசியமயமான ஜூலை 19-ஆம் தேதி மிகுந்த ஈடுபாட்டுடன் ஆண்டுதோறும் அனுசரிக்கப்படுகிறது.

அகில இந்திய வங்கி ஊழியர் சங்கம் என்ற வலிமைமிகு சங்கத்தின் பதாகையை ஏந்தியிருக்கும் வங்கி ஊழியர்களான நாம், 1969 ஆம் ஆண்டில் வென்றெடுத்த வங்கிகள் தேசியமயத்தினையும், அதன் விளைவாக ஏற்பட்ட பொருளாதார சுதந்திரத்தையும் எவ்வித விலை கொடுத்தேனும், எத்தகைய சூழ்நிலையிலும் தோல்வியடைய அனுமதிக்க மாட்டோம் என்று வங்கிகள் தேசியமய நன்னாளில் சூளுரை ஏற்போம்.

வங்கிகள் தேசியமயத்தின் 56வது ஆண்டு நிறைவு சிறப்புக் கூட்டம்-சென்னை
பல்வேறு மாவட்டங்களில் நமது சங்க உறுப்பினர்கள் உற்சாகத்துடன் அனுசரிப்பு

56வது ஆண்டு வங்கிகள் தேசியமய நிறைவினைக் கொண்டாடும் வகையில் தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனத்தின் சார்பில் சென்னை A K நாயக் பவனில் 19-07-2025 அன்று சிறப்புக் கூட்டம் நடைபெற்றது.



தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனத்தின் தலைவர் தோழர் A சிதம்பரம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் சென்னை நகரம் மற்றும் புறநகர் பகுதிகளில் பணியாற்றும் நமது சங்க உறுப்பினர்கள் பெருமளவில் கலந்துகொண்டனர்.

கூட்டத்தில் அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் தோழர் **C H** வெங்கடாசலம், தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் தோழர் **E** அருணாசலம் ஆகியோர் பங்கேற்று சிறப்புரை ஆற்றினர். அகில இந்திய வங்கி ஊழியர் சங்க நிர்வாகிகள் தோழர் **S D** ஸ்ரீனிவாசன், தோழர் **K** ஸ்ரீகிருஷ்ணா மற்றும் சம்மேளனத்தின் நிர்வாகிகள் வாழ்த்துரை வழங்கினர்.

தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் தோழர் **E** அருணாசலம் அவர்கள் தன்னுடைய உரையில், அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் இடைவிடாத போராட்டங்களின் விளைவாக இந்திய நாட்டில் இயங்கிவந்த தனியார் துறை வங்கிகள் **1969**ம் ஆண்டு அரசுடைமை ஆக்கப்பட்டன என்றும், அதன் விளைவாக ஏராளமான வங்கிக் கிளைகள் துவக்கப்பட்டதுடன், வங்கிச் சேவை அனைத்துப்பிரிவு மக்களுக்கும் கிடைக்கப்பெற்றது என்று விளக்கினார்.

பெருமுதலாளிகளின் வசமிருந்த வங்கிகளை அரசுடைமை ஆக்கி, அந்த வங்கிகளின் நிர்வாகக் குழுக்களில் ஊழியர்களின் பிரதிநிதிகள் இடம்பெற வைத்தது அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் வரலாற்றுச் சாதனை என்று கூறினார். தற்போதைய ஒன்றிய அரசாங்கத்தின் பொதுத்துறை விரோத நடவடிக்கைகளை முறியடித்து, பொதுத்துறை வங்கிகளை பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தினை தோழர் **E** அருணாசலம் அவர்கள் வலியுறுத்தினார்.



கூட்டத்தில் சிறப்புரை ஆற்றிய தோழர் **C H** வெங்கடாசலம் அவர்கள், வங்கிகள் தேசியமயம் ஆனதன் விளைவாகவே, வங்கிகளில் பணியாற்றும் வாய்ப்பு நமக்கு கிடைத்தது என்றும், வலுவான போராட்டங்கள் மூலம் வங்கிகள் தேசியமயத்தினை பெற்றுத் தந்த போற்றுதலுக்குரிய நம் தலைவர்களான தோழர் பிரபாத்கர் மற்றும் தோழர் பர்வானா ஆகியோருக்கு வங்கி ஊழியர்கள் என்றென்றும் நன்றி உள்ளவர்களாக இருந்திட வேண்டும் என்று கூறினார்.

வங்கிகள் தேசியமயத்தின் விளைவாகவே பொதுமக்களின் பல்லாயிரம் கோடி ரூபாய் சேமிப்பு பாதுகாப்பாக உள்ளது என்றும், அதனைப் பாதுகாத்திட ஒன்றிய அரசின் தனியார்மய நடவடிக்கைகளை ஒன்றிணைந்து தடுத்திடவேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்தார்.

தற்போது வங்கி ஊழியர்கள் பெற்றுள்ள அனைத்து சலுகைகளும், பணிப் பாதுகாப்பும் தேசியமயத்தின் விளைவாகவே நாம் அடைந்துள்ளோம் என்றும், பொதுத்துறை வங்கிகளை பாதுகாப்பது நமது கடமை என்றும் தோழர் **C H** வெங்கடாசலம் அவர்கள் வலியுறுத்தினார்.

அண்மையில் சென்னை அண்ணா நகர் பஞ்சாப் நேஷனல் வங்கிக் கிளையில், தங்கள் வங்கிக் கணக்கிலிருந்து பெரும் தொகையினை பணப் பரிமாற்றம் செய்திட வேண்டி கிளைக்கு வந்த முதிய வாடிக்கையாளருடைய பதற்றம் கண்டு, அவர்கள் ஏதோ பிரச்சினையில் இருப்பதாக உணர்ந்த நம் சங்க உறுப்பினர் தோழர் பிரியங்கா அவர்கள், இது குறித்து கிளை அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டுசென்றதன் மூலம், அவ்வாடிக்கையாளர் சைபர் குற்றவாளிகளின் பிடியில் சிக்கியிருப்பதை கண்டறிந்து, காவல் துறை உதவியுடன் அவர்களுடைய 50 லட்சம் ரூபாய் சேமிப்பு மீட்டுத்தர உதவியுள்ளார்.

தக்க சமயத்தில், விழிப்புணர்வுடன், சமயோசிதமாக செயலாற்றி, மூத்த வாடிக்கையாளரின் பெரும் சேமிப்பினை மோசடியிலிருந்து மீட்டுத்தர காரணமாயிருந்த நமது உறுப்பினர் தோழர் பிரியங்கா இச்சிறப்புக் கூட்டத்தில் சம்மேளனத்தால் பாராட்டப்பட்டார்.





கோவை மாவட்ட வங்கி ஊழியர் சங்கத்தின் சார்பில் 24-07-2025 அன்று கோவை மாநகரில் வங்கிகள் தேசியமய தின 56ம் ஆண்டு நிறைவு விழா சிறப்புக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் AITUC சங்கத்தினைச் சார்ந்த தோழர் C சிவசாமி அவர்கள் பங்கேற்று சிறப்புரை நிகழ்த்தினார். கோவை நகரில் பணியாற்றும் திரளான தோழர்கள் இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர்.



சேலம் மாவட்ட வங்கி ஊழியர் சங்கம் சார்பாக சேலத்தில் நடைபெற்ற சிறப்புக் கூட்டத்தில் AITUC தலைவர் தோழர் D லெனின் கலந்துகொண்டு பொதுத்துறை வங்கிகளின் அவசியத்தினையும், அவை நாட்டு வளர்ச்சிக்கு ஆற்றிடும் பங்கினையும் விளக்கிப் பேசினார்.



கடலூர் மாவட்ட வங்கி ஊழியர் சங்கத்தின் ஏற்பாட்டில் கடலூர் நகரில் நடைபெற்ற தேசியமய தின சிறப்புக் கூட்டத்தில் மாவட்ட சங்கத் தலைவர் தோழர் மீரா அவர்கள் தலைமையில் தேசியமயப் பாதுகாப்பு உறுதி மொழி அனைத்துத் தோழர்களாலும் உற்சாகத்துடன் ஏற்கப்பட்டது.

வங்கிகள் தேசியமயமாக்கப்பட்டதன் 56வது ஆண்டு நிறைவினை அனுசரித்திடும் வகையில், **ஈரோடு மாவட்ட வங்கி ஊழியர் சங்கம்** சார்பில் நடைபெற்ற கூட்டத்தில் ஏராளமான தோழர்கள் கலந்துகொண்டனர்.

தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் நாட்டின் வளர்ச்சிக்கு ஆற்றிடும் பங்களிப்பு குறித்து விவாதிக்கப்பட்டது.





சிவகங்கை மாவட்ட வங்கி ஊழியர் சங்கம் சார்பாக நடைபெற்ற சிறப்புக் கூட்டத்தில் காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக பேராசிரியர் ராம சிதம்பரம் மற்றும் சட்டமன்ற உறுப்பினர் திரு மாங்குடி ஆகியோர் பங்கேற்று வங்கி ஊழியர்களுக்கு ஆதரவு தெரிவித்து உரை நிகழ்த்தினர்.

திருப்பூர் மாவட்ட வங்கி ஊழியர் சங்கம் தேசியமய தினத்தன்று திருப்பூர் நகரில் சிறப்புக் கூட்டத்தினை நடத்தியது.

இக்கூட்டத்தில் மாவட்ட சங்க நிர்வாகிகள் உட்பட பெருமளவிலான தோழர்கள் பங்கேற்று தேசியமயத்தினை காத்திட எத்தகைய போராட்டங்களுக்கும் தயாராக இருப்போம் என்று உறுதி ஏற்றனர்.





கரூர் மாவட்ட வங்கி ஊழியர் சங்கம், வங்கிகள் தேசியமய 56வது ஆண்டு நிறைவு தினத்தினை குறிக்கும் வகையில் கரூர் நகரில் நடத்திய கூட்டத்தில் நமது உறுப்பினர்கள் உற்சாகத்துடன் கலந்து கொண்டனர். தனியார்மய நடவடிக்கைகளுக்கு எதிராக தொடர்ந்து போராடுவோம் என்று உறுதி ஏற்றனர்.



திருச்சி மாவட்ட வங்கி ஊழியர் சங்க நிர்வாகிகளும் உறுப்பினர்களும் வங்கிகள் தேசியமய தினத்தினைக் குறிக்கும் வகையில், மாவட்ட சங்க அலுவலகத்தின் முன்பாக அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் கொடியினை ஏற்றி, பொதுத்துறை வங்கிகளை தனியார் மயப்படுத்தும் முயற்சிகளுக்கு எதிராக கண்டனம் தெரிவித்து உரையாற்றினர்.

வங்கிகள் தேசியமயமாக்கப்பட்டதன் 56வது ஆண்டு நிறைவினை அனுசரித்திடும் வகையில்,



திருநெல்வேலி தூத்துக்குடி மாவட்ட வங்கி ஊழியர் சங்கம் சார்பில் நடைபெற்ற கூட்டத்தில் ஏராளமான தோழர்கள் கலந்துகொண்டனர்.

கூட்டத்தில் AITUC மாவட்டச் செயலாளர் தோழர் சடையப்பன் கலந்துகொண்டு தேசியமயத்தின் மகத்துவம் மற்றும் அதனைப் பாதுகாக்க நாம் மேற்கொள்ளவேண்டிய போராட்டங்கள் குறித்துப் பேசினார்.

விருதுநகர் மாவட்ட வங்கி ஊழியர் சங்கத்தின் சார்பில் சிவகாசி பரோடா வங்கி முன்பாக நடைபெற்ற தேசியமய தின சிறப்புக் கூட்டம் மற்றும் ஆர்ப்பாட்டத்தில், TNSTC-AITUC மண்டலத் தலைவர் தோழர் ராஜேந்திரன் கலந்துகொண்டு வாழ்த்திப் பேசினார்.



ஆர்ப்பாட்டத்தின்போது, பொதுத்துறை வங்கிகளின் முக்கியத்துவம் குறித்த துண்டுப் பிரசுரங்கள் பொது மக்களுக்கு விநியோகிக்கப்பட்டன.



வங்கிகள் தேசியமயமாக்கப்பட்டதன் 56வது ஆண்டு நிறைவினைக் குறிக்கும் வகையில், திண்டுக்கல் மாவட்ட வங்கி ஊழியர் சங்கம் சார்பில் 26-07-2025 அன்று காலை திண்டுக்கல் நகரில் நடைபெற்ற சிறப்புக் கூட்டத்தில் திரளான தோழர்கள் கலந்துகொண்டனர்.



இச் சிறப்புக் கூட்டத்தில் அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் தோழர் C H வெங்கடாசலம், தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனத்தின் பொதுச்செயலாளர் தோழர் E அருணாசலம் ஆகியோர் பங்கேற்று சிறப்புரை ஆற்றினர்.

26-07-2025 அன்று மாலை மதுரை ராமநாதபுரம் மாவட்ட வங்கி ஊழியர் சங்கம், வங்கிகள் தேசியமய தினத்தினைக் குறிக்கும் வகையில் மதுரை மாநகரில் சிறப்புக் கூட்டத்தினை நடத்தியது. இச்சிறப்புக் கூட்டத்திற்கு தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனத்தின் பொதுச்செயலாளர் தோழர் E அருணாசலம் அவர்கள் தலைமையேற்றார்.



அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் தோழர் C H வெங்கடாசலம் இக்கூட்டத்தில் பங்கேற்று சிறப்புரை ஆற்றினர்.

வங்கிகள் தேசியமயத்தினை பாதுகாத்திட எத்தகைய போராட்டங்களுக்கும் தயாராக இருந்திட வேண்டும் என்றும், ஒன்றிய அரசின் தனியார்மய நடவடிக்கைகளுக்கு எதிராக அகில இந்திய வங்கி ஊழியர் சங்கம் அறிவிக்கும் போராட்ட நடவடிக்கைகளில் நமது தோழர்கள் உணர்வுபூர்வமாக பங்கேற்க வேண்டும் என்றும் தங்களுடைய சிறப்புரையில் வேண்டுகோள் விடுத்தனர்.



இச்சிறப்புக் கூட்டத்தில் மாவட்ட சங்க நிர்வாகிகள் உட்பட மதுரை மாவட்டத்தில் பணியாற்றும் பெருமளவிலான நம் தோழர்கள் பங்கேற்றனர்.

ஜூலை 9, 2025 - பொது வேலை நிறுத்தம் மாபெரும் வெற்றி

அரசின் தொழிலாளர் விரோதக் கொள்கைகளுக்கு வங்கி ஊழியர்கள் கடும் எதிர்ப்பு

அகில இந்திய வங்கி ஊழியர் சங்கம், அகில இந்திய வங்கி அதிகாரிகள் சங்கம் மற்றும் இந்திய வங்கி ஊழியர்கள் கூட்டமைப்பு (**AIBEA, AIBOA, BEFI**) ஆகியவற்றின் கூட்டு அழைப்பின் பேரில், மத்திய அரசின் மக்கள் விரோத பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் தொழிலாளர் விரோதக் கொள்கைகளுக்கு எதிராக, ஜூலை 9, 2025 அன்று நடைபெற்ற நாடு தழுவிய பொது வேலை நிறுத்தத்தில் வங்கி ஊழியர்கள் பங்கேற்று ஒன்றிய அரசின் தொழிலாளர் விரோதக் கொள்கைகளுக்கு கடும் எதிர்ப்பு தெரிவித்தனர்.



ஒன்றிய அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கைகள் நமது நாட்டில் பெரிய நிறுவனங்கள் மற்றும் தொழிலதிபர்களின் கைகளில் பெரும் செல்வத்தைக் குவிப்பதற்கும், அதே நேரத்தில், ஏழைகள் வறுமைக் கோட்டிற்குக் கீழே தள்ளப்படுவதற்கும் வழிவகுக்கிறது. இந்தியா வேகமாக வளர்ந்து வருவதாக ஒன்றிய ஆட்சியாளர்கள் பொய்யான பிம்பத்தினை கட்டமைக்க முயன்றிடினும், உண்மையில் பணக்காரர்கள் மட்டுமே மென்மேலும் வளர்ந்து வருவதையும், ஏழைகள் சொல்லொணாத் துன்பத்திற்கு ஆளாக்கப்படுவதையும் கண்கூடாகக் காண்கிறோம்.

கார்பொரேட் பெருநிறுவனங்களுக்கு பல்வேறு சலுகைகள் வழங்கப்படும் அதே வேளையில், பெரும் வரிச் சுமை சாதாரண மக்கள் மீது சுமத்தப்படுகிறது. இந்தியா போன்ற அதிக இளைஞர்களைக் கொண்ட நாட்டில், வேலையின்மை அதிகரித்து, படித்த இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு என்பது முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு மறுக்கப்படுகின்றது. அதிகப்படியான வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்குப் பதிலாக, ஒன்றிய அரசாங்கத்தின் கொள்கைகள் தொழிலாளர் உரிமைகளைக் குறைத்து, வேலைவாய்ப்புகளை பறிப்பதாகவே உள்ளன. அதேபோல், பணவீக்கம் அதிகரித்து, அனைத்து அத்தியாவசியப் பொருட்களின் விலைகளும் உயர்ந்து மக்களின் வாழ்க்கையை மோசமாக்குகின்றன.



ஏழைகள் அன்றாடம் பயன்படுத்தும் அத்தியாவசிய பொருட்கள் அனைத்தின் மீதும் **GST** வரி விதிக்கப்படுவது தாங்க முடியாத சுமையை அதிகரிக்கிறது. நிரந்தர வேலை வாய்ப்புகள் குறைக்கப்பட்டு, மிகக் குறைந்த ஊதியத்துடன் ஒப்பந்த ஊழியர்களால் நிரந்தர காலியிடங்கள் நிரப்பப்படுகின்றன. 'முதலாளிகளின் வணிகத்தை எளிதாக்குவதற்கு' உதவுவதற்காக, தொழிலாளர்களின் வேலை நேரத்தை அதிகரிக்க அரசினால் அனுமதிக்கப்படுகிறார்கள்.

லாபத்தை அதிகப்படுத்துவதற்காக தொழிலாளர்களை நெரித்து சுரண்டுவதற்கான முயற்சிகள் தொடர்ந்து செயலாக்கப்படுகிறது. இத்தகைய சுரண்டலைத் தடுக்க சட்டங்களை வலுப்படுத்துவதற்குப் பதிலாக, சுரண்டலை அதிகரிக்க விதிகள் தாராளமயமாக்கப்படுகின்றன.

பொதுத்துறை நமது நாட்டின் வளர்ச்சி மற்றும் மேம்பாட்டின் உந்துசக்தியாக இருந்த நிலைமையினை சீரழித்து, தற்போது, பொதுத்துறைகளில் அரசின் முதலீடு விலக்கல், தனியார்மயமாக்கல் மற்றும் பணமாக்குதலுக்கான இலக்காக மாற்றப்பட்டுள்ளது. பொதுத்துறை வங்கிகள் மற்றும் காப்பீட்டு நிறுவனங்கள் தனியார்மயமாக்கப்பட வேண்டும் என்று ஒன்றிய அரசு பல்வேறு நடவடிக்கைகளை தீவிரப்படுத்தியுள்ளது.

பெருநிறுவனங்கள் அதிக லாபத்தை அனுபவிக்கும் அதே வேளையில் தொழிலாளர்கள் வேலைகளை இழக்கின்றனர். பல துறைகளில் குறைந்தபட்ச ஊதியம் கூட மறுக்கப்படுகின்றது. நிரந்தர வேலைகள் ஒப்பந்தத் தொழிலாளர்களால் நிரப்பப்பட்டு சுரண்டப்படுகின்றனர். பெண் தொழிலாளர்களுக்கு அவர்களின் அடிப்படை உரிமைகள் மற்றும் தேவைகள் மறுக்கப்படுகின்றன.

நான்கு தொழிலாளர் சட்டங்களை ரத்து செய்யவும் - பழைய ஓய்வூதியத் திட்டத்தை மீண்டும் அமல்படுத்தவும் மத்திய தொழிற்சங்கங்கள் கோரிக்கை

பல வருட போராட்டங்கள் மற்றும் தியாகங்கள் மூலம் தொழிலாளி வர்க்கத்தால் வென்றெடுக்கப்பட்ட தொழிலாளர் சட்டங்களை மாற்றுவதற்காக 'தொழிலாளர் குறியீடுகள்' கொண்டு வரப்படுகின்றன. தொழிலாளர் சட்ட சீர்திருத்தங்கள் முதலாளிகளுக்கு உதவுவதற்கும் தொழிலாளர் அடிப்படை உரிமைகளைப் பறிப்பதையே நோக்கமாக கொண்டுள்ளன.




குறைந்த ஊதியம் கொண்ட ஒப்பந்தத் தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்துவது, வேலை நேரத்தை அதிகரிப்பது, தொழிற்சங்க உரிமைகளை மறுப்பது, தொழிலாளர் வேலைநிறுத்தம் செய்யும் உரிமையை முடக்குவது போன்றவற்றுக்கு முதலாளிகளுக்கு அளவற்ற சுதந்திரம் வழங்கப்படுகிறது.

விவசாயமே நமது நாட்டின் முக்கிய தொழில். ஆனால் ஒன்றிய அரசின் கொள்கைகளால் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் விவசாயத் துறையின் பங்களிப்பு வெகுவாகக் குறைந்து நெருக்கடிக்கு ஆளாகியுள்ளது.

விவசாயிகள் தங்கள் விளை பொருட்களுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலையை கோரும் நிலையில் அது மறுக்கப்பட்டு உற்பத்திப் பொருட்களை பதுக்குவதற்கும் லாபம் ஈட்டுவதற்கும் அரசாங்கமே பெரு முதலாளிகளுக்கு சாதகமாக செயல்படுகின்றது.

சமூகத்தின் மேல்மட்டத்தில் உள்ள 5% மக்கள் 70% செல்வத்தைக் கட்டுப்படுத்துகிறார்கள். ஆனால், கீழ்மட்டத்தில் உள்ள 50% மக்கள் 3% செல்வத்தை மட்டுமே கொண்டுள்ளனர். இம்மோசமான நிலைமை காரணமாக நாட்டு மக்களிடையே சமத்துவமின்மை விரிவடைந்து, அவர்களுடைய வாழிக்கை நிலைமையினை அச்சுறுத்தும் விதமாக அதிகரித்து வருகிறது.

இவை அனைத்தும் ஒன்றிய அரசாங்கத்தின் மக்கள் விரோதக் கொள்கைகளால் ஏற்படுகின்றது. தனியார் துறையின் நோக்கம் அதிக லாபம் ஈட்டுவது என்பது நாம் அனைவரும் அறிவோம், ஆனால் பொதுத்துறையின் இலக்கு சமூக மேம்பாடு. பொதுத்துறை நாட்டில் மிகப்பெரிய உள்கட்டமைப்பை உருவாக்கியுள்ளது.



பொதுத்துறை லட்சக்கணக்கான வேலை வாய்ப்புகளை இளைஞர்களுக்கு உருவாக்கியுள்ளது. பொதுத்துறை நமது பொருளாதார வளர்ச்சியின் முக்கிய இயந்திரமாக இருந்து வருகிறது. எனவே பொதுத்துறையை தனியார் முதலாளிகளுக்கு விற்கப்படுவதை எக்காலத்திலும் நாம் ஏற்றுக்கொள்ள முடியாது.

அதனால்தான் இந்தக் கொள்கைகளை எதிர்க்க வேண்டிய அவசியம் கருதி, **INTUC, AITUC, HMS, CITU, AIUTUC, TUCC, SEWA, AICCTU, LPF, UTUC** மற்றும் பல்வேறு தொழிற்சங்க கூட்டமைப்புகள், விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள் ஆகியோர் மக்கள் விரோத பொருளாதாரக் கொள்கைகளுக்கு எதிராகப் போராட முடிவு செய்தனர்.

மத்திய தொழிற்சங்கங்களால் முன்னெடுக்கப்பட்ட தொழிலாளர்களின் தேசிய மாநாடு ஒன்றிய அரசின் மக்கள் விரோதக் கொள்கைகளுக்கு எதிராகப் போராட பொது வேலைநிறுத்தத்திற்கு அழைப்பு விடுத்தபோது, **AIBEA** அதை வரவேற்று வேலைநிறுத்தப் போராட்டத்தில் சேர முடிவு செய்த முதல் அமைப்புகளில் ஒன்றாகும்.

தொழிலாளி வர்க்கம் நமது உத்வேகம் - தொழிலாளி வர்க்க ஒற்றுமை நமது பலம்
தொழிலாளி வர்க்கப் போராட்டங்கள் நமது உந்துசக்தி



வங்கி ஊழியர்கள் தொழிலாளி வர்க்கத்தின் முக்கியமான அங்கம் என்பதை உணர்த்தி ஜூலை 9, 2025 அகில இந்திய வேலைநிறுத்தத்தினை மாபெரும் வெற்றிகரமாக்கியுள்ளனர். அதற்காக அனைத்து தொழிற்சங்கங்கள் மற்றும் போர்க்குணமிக்க நம் உறுப்பினர்களுக்கு தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனம் தன்னுடைய புரட்சிகரமான வாழ்த்துக்களை தெரிவித்து பாராட்டுகின்றது.

அரசாங்கத்தின் கொள்கைகளுக்கு எதிராக தமிழ்நாட்டின் பல்வேறு மையங்களில் பொது வேலை நிறுத்த தினமன்று நடைபெற்ற ஒன்றிணைந்த ஆர்ப்பாட்டங்கள் மற்றும் பேரணிகளில் நம் உறுப்பினர்கள் மிகவும் உற்சாகமாகவும் உறுதியுடனும் பங்கேற்று, வங்கிகளில் இந்த வேலை நிறுத்தத்தினை வெற்றிபெறச் செய்துள்ளனர்.



இம்மாபெரும் வேலை நிறுத்தத்தில் வங்கி ஊழியர்களும் பங்கேற்றிருப்பதன் மூலம், நாம் என்றென்றும் தொழிலாளி வர்க்கத்திலிருந்து பிரிக்க முடியாதவர்கள் என்பதையும் நாம் எப்போதும் உழைக்கும் மக்களின் பிரிக்க முடியாத அங்கம் என்பதையும் மீண்டும் நிரூபித்துள்ளோம்.

ஒன்றிணைந்த தொழிலாளி வர்க்கம் நமது உத்வேகம் - பரந்துபட்ட தொழிலாளி வர்க்க ஒற்றுமை நமது பலம் - உணர்வுபூர்வமான தொழிலாளி வர்க்கப் போராட்டங்கள் நமது உந்துசக்தி என்ற புரிதலில், இந்த வரலாற்று சிறப்புமிக்க வேலைநிறுத்தத்தில் பங்கேற்றதில் தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனம் பெருமை கொள்வதோடு, மாநிலம் முழுமையும் வங்கித் துறையில் பொது வேலைநிறுத்தத்தினை பெரும் வெற்றி பெறச் செய்த நம் இணைப்பு சங்கங்கள் மற்றும் உறுப்பினர்களை சம்மேளனம் பாராட்டுகின்றது.

தமிழ்நாடு மெர்கன்டைல் வங்கி ஊழியர் சங்க மாநாடு- மதுரை - 27-07-2025

தமிழ்நாடு மெர்கன்டைல் வங்கி ஊழியர் சங்கத்தின் 23வது மாநாடு மதுரையில் ஜூலை 27, 2025 அன்று சிறப்புற நடைபெற்றது. மாநாட்டினை அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் தோழர் C H வெங்கடாசலம் அவர்கள் துவக்கி வைத்து சிறப்புரை ஆற்றினார். தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் தோழர் E அருணாசலம் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார்.

மதுரை மாவட்ட AITUC பொதுச் செயலாளர் தோழர் R முருகன், தனியார் வங்கி ஊழியர் சங்கங்களின் தேசிய அமைப்பாளர் தோழர் A R சுஜித் ராஜு, மதுரை, சேலம் மற்றும் கோவை மாவட்ட வங்கி ஊழியர் சங்கங்களின் நிர்வாகிகள் மாநாட்டினை வாழ்த்திப் பேசினர்.



அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் தோழர் **C H** வெங்கடாசலம் அவர்கள் மாநாட்டினை துவக்கி வைத்து உரையாற்றுகையில், தமிழ்நாடு மெர்கன்டைல் வங்கி ஊழியர் சங்கம் சிறியதாக இருந்திடினும், சங்கத்தின் செயல்பாடுகள் சீரியதாக உள்ளதைக் குறிப்பிட்டு வெகுவாகப் புகழ்ந்தார்.

வங்கி நிர்வாகம், வங்கி சார்பு சங்கம் ஆகியவற்றின் அடக்குமுறை மற்றும் இடையூறுகளை தகர்த்தெறிந்து ஊழியர் நலனுக்காக தொடர்ந்து குரல் எழுப்பிவருவதாக தமிழ்நாடு மெர்கன்டைல் வங்கி ஊழியர் சங்க நிர்வாகிகளை தோழர் **C H** வெங்கடாசலம் அவர்கள் பாராட்டினார்.



சமீபத்தில் தமிழ்நாடு மெர்கன்டைல் வங்கி நிர்வாகத்தின், **C2C** போன்ற ஊழியர் விரோத நடவடிக்கைகளை எதிர்த்து விமர்சித்தமைக்காக, தமிழ்நாடு மெர்கன்டைல் வங்கி ஊழியர் சங்கத்தின் முக்கிய நிர்வாகிகள் பணி இடை நீக்கம் செய்யப்பட்டதை குறிப்பிட்ட தோழர் **C H** வெங்கடாசலம் அவர்கள், தமிழ்நாடு முழுவதிலுமுள்ள அனைத்து வங்கித் தோழர்களின் ஆதரவோடு 'முத்துநகர் முற்றுகை' போராட்ட தர்ணா வெற்றிகரமாக அனுசரிக்கப்பட்டு, **TMB** வங்கி நிர்வாகத்தின் நடவடிக்கை முறியடிக்கப்பட்டது என்று கூறி, இந்த துரித நடவடிக்கை, தமிழ்நாடு மெர்கன்டைல் வங்கியில் பணியாற்றும் ஏனைய அனைத்து ஊழியர்கள் மற்றும் அதிகாரிகளின் கவனத்தினை வெகுவாக ஈர்த்து நமது சங்க நடவடிக்கையின் நியாயங்களை உணர்த்தியுள்ளது என்று கூறினார்.



தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் தோழர் **E** அருணாசலம் அவர்கள் தனியார் துறை வங்கிகளில் தொழிற்சங்கம் கட்டமைத்து செயலாற்றுவதில் ஏற்படும் எதிர்ப்புகளையும், இடையூறுகளையும் குறிப்பிட்டு, தமிழ்நாடு மெர்கண்டைல் வங்கி ஊழியர் சங்கம் துவங்கப்பட்ட காலம் முதல் தொய்வில்லாது தொழிற்சங்கப் பணியாற்றி வருவது குறித்து வெகுவாகப் பாராட்டினார்.

தமிழ்நாடு மெர்கன்டைல் வங்கி ஊழியர்களின் ஓய்வுபெறும் வயதினை மற்ற வங்கி ஊழியர்களைப்போல் **60**ஆக உயர்த்திட வலியுறுத்தி தமிழ்நாட்டிலுள்ள அனைத்து வங்கி ஊழியர்களும் 'கோரிக்கை தினம்' அனுசரிக்கவுள்ளதாகக் கூறிய தோழர் **E** அருணாசலம் அவர்கள், **TMBEU** சங்கம் பெரும்பான்மை உறுப்பினர்களை இணைத்து மேலும் வலிமையுடன் செயல்படுவதற்கு தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனம் அனைத்து வகையிலும் உறுதுணையாக இருக்கும் என்று உறுதி கூறினார்.

தமிழ்நாடு மெர்கன்டைல் வங்கி ஊழியர் சங்கத்தின் **61**வது ஆண்டு விழாவினைக் குறிக்கும் வகையில் சங்க உறுப்பினர்கள் பங்கேற்ற கருத்தரங்கம் மற்றும் கவிதை அரங்கம் நடைபெற்றது. சங்கத்தின் முன்னாள் தலைவர்கள் மாநாட்டில் சிறப்பிக்கப்பட்டனர்.



மாநாட்டிற்கு முதல்நாள் மதுரையில் அமைந்துள்ள அன்னை தெரசா ஆதரவற்றோர் இல்லத்தில் உள்ளோருக்கு **TMBEU** சார்பில் மதிய உணவு வழங்கப்பட்டது.

மாநாட்டின் இறுதியில் சங்கத்தின் தலைவராக தோழர் **P** பிரபாகரன், பொதுச் செயலாளராக தோழர் **M N** விக்னேஷ் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். புதிதாக பொறுப்பேற்றுள்ள தமிழ்நாடு மெர்கண்டைல் வங்கி ஊழியர் சங்க நிர்வாகிகளை தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனம் வாழ்த்துகின்றது.

நம் உறுப்பினர்களுக்கு சலுகைக் கட்டணத்தில் கண் சிகிச்சை வசதி
Dr அகர்வால்ஸ் கண் மருத்துவமனையுடன்
அகில இந்திய வங்கி ஊழியர் சங்கம் புரிந்துணர்வு ஒப்பந்தம்

வங்கிக் கிளைகளில் பணியாற்றும் ஊழியர்கள், பணி நிமித்தமாக, அன்றாடம் கணினி மற்றும் கைபேசியில் செலவிடப்படும் நேரம் அதிகரித்து வருவதால், வங்கி ஊழியர்கள் தங்கள் கண்களில் அதிக அழுத்தத்தை உணர்வதோடு, பல்வேறு வகையான கண் பாதிப்புகளுக்கு உள்ளாகின்றனர்.

இதனைக் கருத்தில் கொண்டு, கடந்த பனிரெண்டாவது இருதரப்பு ஒப்பந்தத்தில் அனைத்து வங்கி ஊழியர்களுக்கும் வருடாந்திர கண் பரிசோதனைக்காக ஆண்டுக்கு 500 ரூபாய் வங்கி நிர்வாகம் வழங்கிடும் வகையில் அகில இந்திய வங்கி ஊழியர் சங்கம் ஒப்பந்தம் ஏற்படுத்தியது.

அதன் தொடர்ச்சியாக, நம் உறுப்பினர்களுக்கு உதவிடும் வகையில், கண்களில் ஏற்படும் பிரச்சினைகள் குறித்த மருத்துவ ஆலோசனை, கண் பரிசோதனை மற்றும் சிகிச்சைக்கு உதவும் வகையில், புகழ்பெற்ற டாக்டர் அகர்வால் கண் மருத்துவமனையுடன் அகில இந்திய வங்கி ஊழியர் சங்கம் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளது.



இந்த உடன்பாட்டின்படி, நமது சங்க உறுப்பினர்கள், அவர்களுடைய குடும்ப உறுப்பினர்கள் மற்றும் ஓய்வு பெற்றவர்கள் சலுகை கட்டணத்தில் இம்மருத்துவ மனையில் கண் தொடர்பான பிரச்சினைகளுக்கு சிகிச்சை பெற்றுக்கொள்ள அனுமதிக்கப்படுவர்.

இந்த ஒப்பந்தத்தின்படி டாக்டர் அகர்வால் கண் மருத்துவமனையில் கீழ்க்கண்ட சலுகைகள் வழங்கப்படும்:

- ஊழியர்கள் மற்றும் ஓய்வு பெற்றவர்களின் 6 குடும்ப உறுப்பினர்களுக்கு அவர்களின் முதல் வருகையின் போது இலவச ஆலோசனை **(FREE CONSULTATION ON FIRST VISIT)**
- மறுஆய்வு ஆலோசனை கட்டணத்தில் 50% தள்ளுபடி **(FOR REVIEW CONSULTATION)**
- கண்ணாடிகளின் விலையில் 15% தள்ளுபடி **(FOR SPECTACLES)**
- உயர்நிலை பரிசோதனை கட்டணத்தில் 25% தள்ளுபடி **(FOR HIGHER INVESTIGATIONS)**
- அறுவை சிகிச்சை கட்டணம் பணமாக செலுத்தும்போது 10% தள்ளுபடி. **(FOR CASH SURGERIES)**

இந்த வசதியைப் பெற விரும்புவோர் (ஊழியர்கள் /ஓய்வு பெற்றோர் /குடும்ப உறுப்பினர்கள்) பல்வேறு இடங்களில் உள்ள டாக்டர் அகர்வால்ஸ் கண் மருத்துவமனைக்குச் (தமிழ்நாட்டில் அமைந்துள்ள 77 மருத்துவ மனை கிளைகளில்) சென்று **AIBEA**-வின் உடன்பாட்டினைக் கூறி தங்கள் அடையாள அட்டைகளைக் காண்பித்து சலுகை கட்டணத்தில் சிகிச்சை பெறலாம்.

காப்பீட்டுத் துறையில் 100% அந்நிய நேரடி முதலீடு
IDBI வங்கியை தனியாருக்கு விற்பனை செய்யும் முயற்சிகள்
பிராந்திய கிராமப்புற வங்கிகளில் அரசு மூலதனத்தை திரும்பப் பெறுதல்
ஆகிய மக்கள் விரோத நடவடிக்கைகளை எதிர்த்து போராட்ட அறைகூவல்

இந்திய காப்பீட்டுத் துறையில் 100% அந்நிய நேரடி முதலீட்டை **(100% FDI IN INSURANCE SECTOR)** அனுமதிக்க ஒன்றிய அரசாங்கம் முடிவு செய்துள்ளது. இதேபோல், **IDBI** வங்கியில், ஒன்றிய அரசு மற்றும் **LIC** நிறுவனம் இணைந்து தற்போது 94% மூலதனத்தை வைத்துள்ளன.

ஆனால், ஒன்றிய அரசாங்கம் மற்றும் **LIC** வசம் உள்ள பங்கு மூலதனத்தில் **61%** பங்குகளை தனியார் கார்பொரேட் முதலீட்டாளர்களுக்கு விற்க ஒன்றிய அரசு முடிவு செய்துள்ளது. இந்நடவடிக்கை மூலம் **IDBI** வங்கி தனியார்மயமாகும் நிலைமை ஏற்பட்டுள்ளது.



மேலும், தற்போது பிராந்திய கிராமப்புற வங்கிகளின் மூலதனம் முழுமையும் மத்திய அரசு, மாநில அரசு மற்றும் பொதுத்துறை வங்கிகளால் அளிக்கப்படுவதால், அவ்வங்கிகள் அனைத்தும் பொதுத்துறையில் உள்ளன. ஆனால் தற்போது ஒன்றிய அரசு **RRB**க்களின் மூலதனத்தை தனியாருக்கு விற்பனை செய்ய அறிவுறுத்தியுள்ளது.

இத்தகைய பிற்போக்கான நடவடிக்கைகள் அனைத்தும் மக்கள் நலன் மற்றும் ஊழியர் நலனுக்கு எதிரானவை. தற்போது நாடாளுமன்றக் கூட்டத்தொடர் நடைபெறும் வேளையில், அரசின் இத்தகைய நடவடிக்கைகளுக்கு நம் எதிர்ப்பினை காட்டும்விதமாக, பின்வரும் போராட்ட திட்டத்தினை **AIBEA, AIIEA, GIEAIA, AILICEF, AIBOA** மற்றும் **BEFI** சங்கங்கள் ஒன்றிணைந்து அனுசரிக்க முடிவு செய்யப்பட்டுள்ளன:

08-08-2025	உறுப்பினர்கள் அனைவரும் கோரிக்கை அட்டை அணிதல்
09-08-2025 மற்றும் **10-08-2025**	பல்வேறு மையங்களில் நம் போராட்ட பிரச்சாரக் கூட்டங்கள்
11-08-2025	**IDBI** வங்கியில் பணியாற்றும் ஊழியர்கள் மற்றும் அதிகாரிகளின் நாடு தழுவிய ஒருநாள் வேலை நிறுத்தம்
11-08-2025	வங்கிகள், **LIC** மற்றும் **GIC** அலுவலகங்கள் முன்பு பல்வேறு மையங்களில் ஒன்றிணைந்த ஆர்ப்பாட்டங்கள்

வங்கி மற்றும் காப்பீட்டுதுறையில் அதிகரித்து வரும் அரசின் தாக்குதல்களுக்கு எதிராக ஒன்றுபட்ட எதிர்ப்பை காட்டும்வகையில் அனைத்து தொழிற் சங்கங்களும் உறுப்பினர்களும் ஒன்றிணைந்து போராடுவதை அகில இந்திய வங்கி ஊழியர் சங்கம் வரவேற்றுள்ளது.



மேற்கண்ட போராட்ட திட்டங்களை நிதித்துறையில், குறிப்பாக வங்கித் துறையில் முழுமையாக செயல்படுத்திட நம் இணைப்பு சங்கங்கள் பிரச்சாரக் கூட்டங்களை நடத்துவதோடு ஆர்ப்பாட்ட நடவடிக்கைகளில் நம் தோழர்கள் முழுமையாக பங்கேற்குமாறு தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனம் வேண்டுகோள் விடுக்கின்றது.

DEARNESS ALLOWANCE FOR THE MONTHS OF
AUGUST, SEPTEMBER & OCTOBER 2025
FOR COMMERCIAL BANK EMPLOYEES

FOR SERVING EMPLOYEES – 21.13 % OF PAY
(INCREASE OF 1.16 %)

DA RATES FOR PENSIONERS
NO CHANGE IN DA UPTO 11th BPS PENSIONERS
REDUCTION IN DA FOR 12th BPS PENSIONERS

RETIRED PRIOR TO 01-01-1992 - 2220 SLABS OVER 600 POINTS		
Up to 1250	1251-2000	Above 2000
1487.40 % plus Rs 800	1487.40 % plus Rs 450	1487.40 %
RETIRED AFTER 01-11-1992 UPTO 31-03-1998 - 2083 SLABS OVER 1148 POINTS		
Up to 2400	2401-3850	Above 3850
729.05 % plus Rs 800	729.05 % plus Rs 450	729.05 %
RETIRED AFTER 01-04-1998 UPTO 31-10-2002 - 1949 SLABS OVER 1684 POINTS		
Up to 3550	3551-5650	Above 5650
467.76 % plus Rs 800	467.76 % plus Rs 450	467.76 %
RETIRED ON OR AFTER 01-11-2002 - 1798 SLABS OVER 2288 POINTS		
FOR THE ENTIRE BASIC PENSION AMOUNT – 323.64 %		
RETIRED ON OR AFTER 01-11-2007 - 1661 SLABS OVER 2836 POINTS		
FOR THE ENTIRE BASIC PENSION AMOUNT – 249.15 %		
RETIRED ON OR AFTER 01-11-2012 - 1260 SLABS OVER 4440 POINTS		
FOR THE ENTIRE BASIC PENSION AMOUNT – 126.00 %		
RETIRED ON OR AFTER 01-11-2017 - 782 SLABS OVER 6352 POINTS		
FOR THE ENTIRE BASIC PENSION AMOUNT – 54.74 %		
RETIRED ON OR AFTER 01-11-2022 – 21.13 POINTS OVER 123.03 POINTS		
FOR THE ENTIRE BASIC PENSION AMOUNT – 21.13 %		



அனைவருக்கும்

இந்திய சுதந்திர தின

நல் வாழ்த்துக்கள்